[28th August 1961

SRI M. KALYANASUNDARAM : மேலும் வேண்டுமானல் மாணவர்களுடைய பர்சன்டேஜை உயர்த்துவார்களா ?

(பதில் இல்லை.)

SRI T. S. RAMASWAMI : May I know whether there is any proposal for giving any special coaching to the Scheduled Caste students?

THE HON. SRI M. A. MANICKAVELU : Not that I am aware of.

Third Five-Year Plan

* 1441 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நம் மாநிலத்திற்கு முடிவாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : The final provision allotted for the Third Five-Year Plan of this State is Rs. 290·89 crores.

SRI S. M. ANNAMALAI : முன்பு 10,200 கோடிக்கு திட்டம் போடப்பட்டபோது ஒதுக்கிய பணம், அதை 12,000 கோடிக்கு மேல் மாற்றியிருக்கும்போது இந்தத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறதா ? அப்படி நமக்குள்ள தொகையை உயர்த்த நமது மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 12,000 கோடி, 10,000 கோடி என்றெல்லாம் சொல்வது, பப்ளிக் செக்டர், ப்ரைவேட் செக்டர் எல்லாவற்றையும் சேர்த்து சென்ட்ரல் கவர்ன்மெண்ட், ஸ்டேட் கவர்ன்மெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்திருக்கக்கூடியது. ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு கொடுப்பதை எடுத்துக்கொண்டால் 291 கோடி போதுமானது என்றுதான் கருதவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்பது ஒருபுறமிருக்கட்டும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் அறிக்கை இறுதியாக முடிவு செய்யப்பட்டு பார்லிமென்ட்டில் அங்கீகரிக்கப்பட்ட பிறகு நமது ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் அந்த இறுதி அறிக்கையை நமது சபை முன் வைத்து அதன் மீது விவாதம் நடத்த சில தினங்கள், ஒதுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கவனிக்க வேண்டிய விஷயம். நமது ராஜ்யத்தை பொறுத்தமட்டில் திட்டம் அச்சடித்து தயாராகிக் கொண்டிருக்கிறது, இரண்டு மூன்று நாட்களில் தயாராகிவிடும். அங்கத்தினர்கள் அதுபற்றி ஒரு விவாதம் வைக்க வேண்டுமென்று விரும்பினல் விவாதம் வைத்துக்கொள்வதில் ஆட்சேபனே இருக்க முடியாது.

28th August 1961]

SRI K. VINAYAKAM : Was this allotment of Rs. 200 (two hundred) and odd crores to our State decided upon on population basis or according to the needs and resources available to work on this Third Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM : Needs are always much greater than availability of resources. Not only the population criterion was taken into account but the backwardness of the area, various other facilities which are already available and also with reference to our performance during the Second Plan period—all these factors were taken into consideration and then these figures were arrived at for various States.

SRI M. KALYANASUNDARAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான யோசனைகளை இந்த சபையில் விவாதித்து ஐந்து யோசனைகளை ஏகோபித்து சிபார்சு செய்தோமே, அந்த ஐந்து யோசனைகளும் மூன்றாவது திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். ஐந்து திட்டங்களும் இடம் பெற்றிருக்கின்றன. சேதுசமுத்திர திட்டம் மட்டும் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது. மற்ற ஐந்தும் இடம் பெற்றிருக்கின்றன.

SRI A. A. RASHEED : May I know whether Government have any information regarding the amount expected in the private sector in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

SRI M. KALYANASUNDARAM : ஐந்தும் இடம் பெற்றிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஐந்தில் ஒன்று அணு மின்சார நிலையம் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பது. அதுவும் இடம் பெற்றிருக்கிறதா ? இல்லை திட்டத்தில் 10 லட்சம் ஒதுக்குவதோடு நிற்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அணு மின்சார நிலையம் எடுத்துக்கொள்வதற்காகத்தான் இப்பொழுது அதற்கான ப்ரிலிமினரி இன்வஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கிறது. அணு மின்சார நிலையம் போட்டவுடனேயே, உடனே அது ஆரம்பிக்கக் கூடியதல்ல. மத்திய அரசாங்கம் இதுபற்றிக் கூறியதை அங்கத்தினர்கள் கேட்டிருக்கலாம். தென் பகுதிக்கு ஒரு அணு மின்சார நிலையம் அவசியம், அதை எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether copies of the Third Plan will be placed on the table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. We have asked for sufficient number of copies from the Government of India and the copies, when received, will be placed on the table of the House.